ஈழநாதம்
Eelanatham மக்கள் நாளிதழ்
பக்கங்கள் - iv

நலிவுற்றோர் நலன் வாழ்வுத் திட்டம்
நலிவுற்றோருக்கு உதவுவோம்
கொடிவாரம்
01.07.2003 - 21.07.2003
சமுதாய முன்னேற்ற நிலையம், தலைமைச் செயலகம், கிளிநொச்சி.

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி - 26 | 11-07-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 143

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான முன்மொழிவுகள் தயார் நிலையில்

## விரைவில் புலிகளுக்கு அனுப்பப் படுமென அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

**இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான அடிப்படை முன்மொழிவுகளை ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் தயாரித்து விட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார். அது விடுதலைப்புலிகளின் பரிசீலனைக்கு அனுப்பத் தயார்நிலையில் உள்ளதாகவும் அவர் கூறினார்.**

அடுத்துவரும் சில தினங்களில் நோர்வே அனுசரணையாளர்களூடாக இது அனுப்பிவைக்கப்படும் எனவும் சமாதான முயற்சிகள் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதே அரசாங்கத்தின் விருப்பம் எனவும் தெரிவித்தஅவர் விரைவில் சமாதானப் பேச்சுக்கள் தொடரும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே இவ்விபரங்களை அவர் தெரிவித்தார்.

## நெடுந்தீவில் இறக்கப்பட்டனர்

(வடமராட்சி)

இந்தியாவில் அகதிகளாக இருந்து தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த அகதிகள் 13பேர் நேற்று மன்னாருக்கு திரும்பிக்கொண்டிருந்த வேளையில் வழிதவறி நெடுந்தீவுப் பகுதியில் இறக்கப்பட்டுள்ளனர். மன்னார் பகுதியைச் சேர்ந்த இப் 13பேரும் நெடுந்தீவுப் பகுதியில் தரையிறக்கப்பட்டு பின்

(iv ஆம் பக்கம் பார்க்க)

### சர்வதேச தரப்பயிற்சி பெற்ற முதலாவது

## மகளிர்களின் கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு நேற்று சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் இயங்கும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் மகளிர் அணி முதற்தடவையாக பயிற்சி பெற்று வெளியேறியுள்ளது.

33 பேரைக் கொண்ட மகளிர் கண்ணிவெடி அகற்றும் அணிக்கான பயிற்சிகளை என்.பி.ஏ நிறுவனமும், 62 பேரைக்கொண்ட கண்ணிவெடி தகர்ப்பு அணிக்கான பயிற்சிகளை மக் நிறுவனமும் வழங்கியிருந்தன. சர்வதேச் தரத்திற்கேற்ப இப்பயிற்சிகள் வழங்கப்பெற்றுள்ளன.இப்பயிற்சி நிறைவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின்

(iv ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு

## அரசாங்கம் வகுத்துள்ள யோசனைகளை அமைச்சரவைக்கு விளக்க சந்திரிகா கோரல்

வட-கிழக்கில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு அரசு வகுத்துள்ள யோசனைகளை அமைச்சரவைக்கு விளக்கிக் கூறுமாறு சனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் யோசனைகள் தற்போது எந்த நிலையில் இருக்கின்றன - என்பதை விசாரித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த பீரிஸ் இது தொடர்பாக அரசும், புலிகளும் பல்வேறு கருத்துக்களைப் பரிமாறி வருவதாகக் கூறியுள்ளார். அரசு புலிகளுக்குச் சில யோசனைகளைக் கூறினாலும் அவர்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லையென அவர் கூறியுள்ளார். உத்தேச நிர்வாகம் தொடர்பான தமது யோசனைகளையும் புலிகள் இதுவரை கூறவில்லையெனவும் அவர் மேலும் சனா

(iv ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் இன்றுதமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெல்விசன் இன்று வன்னிக்கு வருகை தந்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். பின்னர் அவர் முல்லைத்தீவுக்குச் சென்று அப்பகுதிகளைப் பார்வையிட உள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, அவர் மூன்று தினங்கள் தங்கியிருந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் திருகோணமலையில் வைத்துச் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (லோ,25)

## யுத்தகாலத்தை நினைவூட்டிய படையினரின் சோதனைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரத்தில் பொலிசாருடன் இராணுவத்தினரும் இணைந்து நேற்று நடத்திய சோதனைகள் அங்கு யுத்த காலத்தை நினைவூட்டுவதாக அமைந்திருந்தது.

ஆயுதப்படையினர் நகரில் வாகனங்களை நிறுத்தி அவற்றுக்கான ஆவணங்களைப் பரிசோதித்ததுடன் மக்களிடமிருந்து அடையாள அட்டைகளையும் கோரி பரிசோதித்தனர்.

போர்நிறுத்தத்திற்கு முன்னர் நடந்துகொண்டது போன்று படையினர் நடந்துகொண்டபோதும் சாதாரண சட்டத்தின் கீழேயே தாம் செயற்படுவதாகக் கூறியுள்ளனர்.

இதேவேளை, சிறிலங்காப்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## அஸ்தி கரைக்கத் தடை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பொற்பதி கடற்பரப்பில் இறந்தவர்களின் அஸ்தியைக் கரைக்கக் கூட இராணுவம் தடைவிதித்துள்ளது. அண்மையில் இறந்த ஒருவரின் அஸ்தியைக் கரைப்பதற்காக இக் கடற்கரைப் பகுதிக்குச் சென்றவர்களுக்கு அங்கு அக்கடமையைச் செய்வதற்கோ அஸ்தியைக் கரைப்பதற்கோ அனுமதிக்க

(iv ஆம் பக்கம் பார்க்க)

## பெண் கைது

சிறிலங்கா சனாதிபதியின் எட்டுக் கடிதங்கள் கொண்ட பொதி ஒன்றை கனடாவுக்கு அனுப்ப முயன்றார் எனத் தெரிவிக்கப்பட்டு பெண் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மாலினி அபேவர்த்தன என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். இவர் நீர் கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். இக் கடிதங்களில் என்ன விடயங்கள் உள்ளடங்கியிருந்தன என்பன குறித்து அறிவிக்கப்படவில்லை.

### திருகோணமலை கும்புறுபிட்டியில்

## விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவ வாகனம் மீள ஒப்படைப்பு

கடந்த ஆண்டு திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கும்புறுபிட்டிக்குள் பிரவேசித்த போது கைது செய்யப்பட்ட ஆறு இராணுவச் சிப்பாய்களுடன் கைப்பற்றப்பட்ட இராணுவ வாகனம் ஒன்று நேற்று விடுதலைப் புலிகளால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிலாவெளிக்கு அருகில் உள்ள சூனிய பிரதேசத்தில் வைத்து மேற்படி கையளிப்பு நிகழ்வு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்னிலையில் நடைபெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் குச்சவெளி இராணுவப் பொறுப்பாளர் ஈகன் இவ் வாகனத்தைப் படையினரிடம் கையளித்தார். (25)

## வீட்டில் தீப்பற்றிக் கொண்டது குழந்தை எரிந்து மரணம்

### சிலாவத்தையில் பரிதாப சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் வீடு தீப்பற்றி எரிந்ததில் குழந்தை ஒன்று பரிதாபகரமாக மரணமடைந்தது.

தங்கவேல் என்பவரின் வீடு தீப்பிடித்துக் கொண்டதில் அவரது குழந்தையான தங்கவேல் தர்சினி (1 ½ வயது) என்பவர் எரிந்து மரணமடைந்தார். இச்சம்பவம் தொடர்பாக முல்லைக் காவல்பணிமனையினர் விசாரணைகளை மேற்கொண்டு முல்லை மாவட்ட நீதிமன்றின் கட்டளைப்படி குழந்தையின் சடலம் அன்று மாலை உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (20)

### யாழ். புன்னாலைக் கட்டுவனில்

## பார ஊர்தியிலிருந்து தவறி வீழ்ந்து இளம் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புன்னாலைக் கட்டுவனில் பாரவூர்தியில் இருந்து தவறி வீழ்ந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த துஷிகாந்தன்(வயது 20) என்ற குடும்பஸ்தரே மரணமானவராவார்.

மேற்படி இளைஞர் பேருந்துக்குக் காத்து நின்றவேளை குறித்த நேரத்தில் பேருந்து வராமையினால் பாரவூர்தி ஒன்றில் ஏறிப் பயணம் செய்து கொண்டிருந்த போது பேருந்து வருவதைக் கண்டு இறங்க முற்பட்ட போதே மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது. (33)

### யாழ். குடாநாட்டில்

## காணாமல் போகும் சம்பவம் குறித்து விசாரிக்க மேலும் மூவர் நியமனம்

(வடமராட்சி)

யாழ்குடாநாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்ள மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக புகார்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவென மேலும் மூன்று விசாரணையாளர்கள் இவ்வாரம் முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக போதிய ஆலோசனைகள் வழங்கவென மனித உரிமை ஆர்வலர் ஒருவரும் இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

(iv ஆம் பக்கம் பார்க்க)

## எமது இயக்கம் சிறு அமைப்பாக இருந்தபோதே அதில் இணைந்துகொண்டவர் நிர்மலன்

### வீரவணக்க நிகழ்வில் கேணல் ஜெயம்

(அலுவலக செய்தியாளர்)

எமது இயக்கம் சிறு அமைப்பாக இயங்கிக் கொண்டிருந்த போது யாழ்ப்பாணத்தில் கப்டன் பண்டிதர் அவர்களுடன் இணைந்து மண்ணின் விடிவிற்காகச் செயற்பட்டவர்தான் இந்த மாவீரர் நிர்மலன். அந்தக் காலப் பகுதியில் இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பல செயற்பாடுகளை ஆற்றி வந்தார் என முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்தில் இடம் பெற்ற மாவீரர் லெப்.கேணல் நிர்மலன் அவர்களின் வீரவணக்க நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தென்முனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், வெளிநாட்டுக்குச் சென்று அங்கிருந்து போராட்டத்துக்காக கேணல் சங்கருடன் இணைந்து கடுமையாக உழைத்தார். போராட்ட வாழ்க்கையில் வெளிப்படையாகச் சண்டைக் களங்களிலிருந்து இவர் செயற்படாவிட்டாலும் போராட்டத்திற்காகப் பெரும் பணியாற்றியுள்ளார்.

(iv ஆம் பக்கம் பார்க்க)

### கிளி. விவேகானந்த நகரில்

# பொது மண்டபம் அமைக்க அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

கிளி. விவேகானந்தநகர் பகுதி மக்களின் நன்மை கருதிப் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் விவேகானந்த நகர்ப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

கெயர் நிறுவன அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மேற்கொள்ளப்படும். இந்நிகழ்வில் மண்டபத்துக்கான அடிக்கல்லை கெயர் நிறுவன இயக்குனர் நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம சேவகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (லோ)

# இராணுவத்தினரால் கடற்றொழிலாளர் படும் சிரமங்கள் குறித்து விபரங்கள் சேகரிப்பு

சிறிலங்கா இராணுவத்தினரின் கெடுபிடிகளால் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான விபரங்களைச் சேகரிக்கும் பணியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு கடற்றொழிலாளர் சங்கத்துடனும் நேரடியாகத் தொடர்புகொண்டு விபரங்களைத் திரட்டும் பணியில் இக்குழு ஈடுபட்டுவருகிறது. இந்த நடவடிக்கையின் போது கடற்றொழிலாளர் சிறிலங்காக் கடற்படையினரின் அடாவடித்தனம் தொடர்பாகவே முறைப்பாடுகள் செய்துள்ளனர். குறிப்பாக இராணுவத்தினரின் கடலோரப் பாதுகாப்பு வலயங்கள் கடற்படையினரின் பாஸ். மற்றும் சோதனைக் கெடுபிடிகள் தொடர்பாகவும் முறைப் பாடுகளைச் செய்துள்ளனர்.

இத்தகவலைச் சேகரிக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி சாதகமான ஒரு தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என்று மக்கள் நம்புகின்றார்கள். (33)


# சி.க.சு. சங்கங்களின் நிறைவான சேவைகள்

81ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின வாழ்த்துக்களுடன் மேலும் எமது சேவையை விரிவுபடுத்தி வன்னி வாழ் மக்களின் மன நிறைவோடு சேவையாற்றும் எமது சேவைகளாவன :

## கடன் வழங்கல்

- அங்கத்துவ சங்கங்களை புனரமைப்பு செய்வதற்கு அவர்களுக்கான தொழில் முயற்சி கடனுதவிகளை துரிதமாக வழங்குதல்.

## சமாச வங்கிச் சேவை

- 12% வட்டியுடன் சிறுவர்களுக்கான சேமிப்புத் திட்டம். இத்திட்டத்தில் வைப்புப்பணம் ஆறாயிரம் (6000/=) பூர்த்தியானதும் பரிசுச்சீட்டிழுப்பில் சேர்க்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.
- க.பொ.த. சாதாரண தரத்தில் 5 பாடங்களில் A சித்தியடைந்தால் ஆண்டொன்றிற்கு 2000/= க.பொ.த உயர்தரப் படிப்பிற்கு உதவுதொகை வழங்கப்படும்.
- பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றிருந்தால் 5000/= நன்கொடை வழங்கப்படும்.
- 7% வட்டியுடன் பெரியவர்களுக்கான சேமிப்புத் திட்டம்
- 12% வட்டியுடன் நிலையான வைப்பு
- இத்துடன் வாழ்க்கையில் ஒளிவீசி வன்னி மண்ணின் இருளைப் போக்கிட (சூரிய மின்சாரம்) சோலர் விற்பனை.

புதிய பல்ப் | இரவு சிக்கன விளக்கு | அழைப்பு மணி | ஆகியவற்றுடன்

குறிப்பிட்ட கால எல்லைக்குள் 10,000/= மானியக் கழிவுடன் தீர்வையுடன்

3 பல்ப் சோலர் - 19687.50
4 பல்ப் சோலர் - 30937.50
5 பல்ப் சோலர் - 39375/=
6 பல்ப் சோலர் - 44437.50

(மேலதிக புதிய மின்குமிழ் ஒன்று இலவசம்)

நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியாளர்களினால் பொருத்தப்படும்.

- கதிரை வாடகை சேவை

## காகிதாதி விற்பனை நிலையம்

பதிப்பகங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றிற்கான காகிதாதி, எழுது பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## சி.க.சு. பதிப்பகம்

எமது வாடிக்கையாளரின் நன்மை கருதி குறைந்த செலவில் சிட்டைப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்குவதுடன்,

- திருமண அழைப்பிதழ்கள்
- பாடசாலை மட்டக் கணிப்பீடுகள்
- நினைவு மலர் புத்தகங்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- திருவிழா நோட்டீஸ்கள்
- லேபிள்கள்
- விளம்பரங்கள்

மற்றும் பதிப்பக வேலைகள் அனைத்திற்கும் குறைந்த விலையில் நிறைவான சேவையைச் செய்து வழங்குகின்றது. கணினி முறையில் ஸ்ரென்ஸில் கட்டிங் செய்து றோணியோ செய்து கொடுக்கப்படும்.

கிளிநொச்சி மாவட்ட
சிக்கன கடனுதவு சங்கங்களின் சமாசம்,
முதன்மைச் சாலை, கிளிநொச்சி.

(3433)


# மேஜர் முரளி கால்பந்துச் சுற்றுப்போட்டி கிளி.யில் நேற்றுச் சிறப்புற ஆரம்பமாகியது

தமிழீழ விளையாட்டுத்துறையால் தேசிய ரீதியாக நடத்தப்படும் கனிஷ்ட பிரிவுகளுக்கான மேஜர் முரளி ஞாபகார்த்த கால்பந்து சுற்றுப் போட்டி நேற்று காலை 8.30 மணிக்கு தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமானது. சுவிஸ் தமிழர்களின் தாயக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி யாக அமைந்த இப் போட்டியில் சுவிஸ் அணியுடன் தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்ட அணிகளும் கலந்துகொண்டன. இலங்கையிலுள்ள நான்கு இனத்தவர்களும் இச்சுற்றுப் போட்டியில் கலந்துகொள்வது சிறப்பமாகும்.



13 வயதுப் பிரிவு சுவிஸ் அணி

13,15, 17,19 வயதுப் பிரிவுகள் கலந்துகொள்ளும் இப்போட்டியில் 13வயது பிரிவில் மட்டு அணி திருமலை அணியை 11-1 என்ற கோல் எண்ணிக்கையிலும் வவுனியா அணியை எதிர்த்து ஆடிய சுவிஸ் அணி 12-0 என்ற கோல் எண்ணிக்கையிலும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.

15 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் மன்னார் அணியை வவுனியா அணி 5-1 என்ற கோல் எண்ணிக்கையிலும், கிளிநொச்சி அணி முல்லை அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும் வெற்றி பெற்றது. 17 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் திருமலை அணி முல்லை அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும், அம்பாறை அணி வவுனியா அணியை 5-0 என்ற கோல் எண்ணிக்கையிலும் வெற்றிபெற்றது.

19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் கிளிநொச்சி அணி முல்லை அணியை தங்கக் கோல் மூலம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவானது.

இன்று கிளி. பொதுவிளையாட்டு மைதானத்தில் 19 வயதுக்கு இடையேயான போட்டியில் மட்டு-யாழ் அணிகளும், வவுனியா-மன்னார் அணிகளும், திருமலை-அம்பாறை அணிகளும் மோதவுள்ளன. 13 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் முல்லை-மன்னார் அணிகளும் யாழ்-அம்பாறை அணிகளும் மோதவுள்ளன.

கனகபுரம் மைதானத்தில் 15 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் சுவிஸ்-மட்டு அணிகளும், யாழ்-அம்பாறை அணிகளும் மோதவுள்ளன. 17 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் மட்டு - மன்னார் அணிகளும், சுவிஸ்-கிளிநொச்சி அணிகளும் மோதவுள்ளன.



13 வயதுப் பிரிவு மட்டு அணி


# பணிநிலை வெற்றிடம்

**1.வன்னியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளிற்குப் பயன்படுத்தப்பெறும் ஊர்திகளிற்கான ஓட்டுநர்கள்**

**தகைமைகள்:-**

- ஊர்திகள் ஓட்டும் அனுமதிப் பத்திரம் பெற்றிருப்பதுடன், அனுமதிப்பத்திரம் பெற்று ஒரு ஆண்டு சென்றிருக்க வேண்டும்.
- ஊர்தி ஓட்டுவதில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவம் இருப்பதுடன் அதற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- கொழும்பு - யாழ்ப்பாணம் - வன்னி ஆகிய இடங்களிற்கு ஊர்தி ஓட்டிய அனுமதி/ஓட்டும் திறன் பெற்றிருக்க வேண்டும்.
- ஓரளவு ஆங்கில அறிவும், கணக்கு அறிவும் இருத்தல் வேண்டும்.
- வயது 21 ற்கு மேல் இருத்தல் வேண்டும்.

**2. மொழிபெயர்ப்பாளர்-**

கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளிற்கு சர்வதேச தொழில்நுட்ப ஆலோசகர்களாகப் பணியாற்றுவோர்களிற்கு மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றுதல்.

**தகைமைகள்:-**

- 21 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆங்கிலத்தில் பூரணமாக எழுத/வாசிக்க/பேச/மொழிபெயர்ப்புச் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும்.
- ஓரளவு கணினி பற்றிய அறிவு தெரிந்திருத்தல் வேண்டும்.
- க.பொ.த.உயர்தரம் அல்லது அதற்கு மேலான கல்வித் தரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு:- ஏற்கனவே இப்பணியில் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களாயின் ஒப்பந்தகாலம் 31-யூலை-2003 உடன் முடிவுறுவதால் அவர்களும் விரும்பின் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பங்கள் யாவும் 20.07.2003 இற்கு முன்னதாக தமிழர் புனர்வாழ்வுக்கழக முதன்மைப் பணியகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.**

(சி 8226)

# உள்நாட்டலுவல்கள்,மாகாணசபைகள்,உள்ளூராட்சி அமைச்சு

வடக்கு கிழக்கு மாகாணசபை

# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல. 1846 - SRI (SF)

# கேள்வி கோரல்-இல: 06

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01 வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும்NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக வவுனியா மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்டாட்பதிவு | கூறுவிலைப்பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | VA/NECORD/RD/03 | கல்குண்டாமடுவ- அலகல்ல வீதி (1.820 கி.மீ) புனர்நிர்மாணம் | M7 | 37,000.00 |
| 02 | VA/NECORD/ED/10 | சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தில் 110'X25' வகுப்பறைக்கட்டடம் நிர்மாணம் | M8 | 15,000.00 |
| 03 | VA/NECORD/ED/13 | மன்னகுளம் அ.த.க பாடசாலையில் 110'X25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம் | M8 | 15,000.00 |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

- i நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- ii இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்டாட்" டுடன் மேற்படி M7 க்கு பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.
- iii கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.
- iv "இக்டாட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
- v மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.
- vi ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக் காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

04 பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05 தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும்தகவலை மாவட்ட பிரதிக்கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD வவுனியாவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி:024-22589, பக்ஸ்:024-22590,ஈமெயில்: necordva @ Sltnet.lk.

06 ஒப்பந்த ஆவணங்களை ஜூலை 10 இலிருந்து ஜூலை 24, 2003 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, ரூபா 1000/= மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

07 முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, இதன் NECORD அலுவலகத்தில் ஜூலை 22 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

08 கேள்விகோருவோர் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

09 அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்த பிணை முறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி. வவுனியாவிற்கு ஜூலை 29, 2003 பிற்பகல்3.00க்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

**க.கணேஸ்**

தலைவர் மாவட்ட கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

(சி.8413)

# யாழ்.குடாநாட்டில் யுத்தத்தினால் ஒரு இலட்சத்து 6 ஆயிரம் வீடுகள் பாதிப்பு

## யாழ்.மனிதநேய அமைப்பு தெரிவிப்பு

(வடமராட்சி)

யாழ். குடா நாட்டில் கடந்த காலப் பகுதிகளில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் ஒரு இலட்சத்து ஆறாயிரத்து ஐநூறுக்கும் அதிகமான வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டோ அல்லது பகுதி சேதமாகியோ உள்ளதாக மனித நேய அமைப்புக்களின் இணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் இணையத் தலைவர் சு.பரமநாதன் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த ஏப்ரல் மாத இறுதிவரை திரட்டப்பட்ட புள்ளிவிபரங்களின் படி ஒரு இலட்சத்து எழுபதாயிரத்து நூற்றி ஐம்பத்தெட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த 594702 பேர் குடாநாட்டில் நிரந்தரமாகக் குடியமர்ந்துள்ளனர். ஆனால் அவர்களது ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வீடுகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. அவற்றில்38502 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. ஏனையவை பகுதியாக அழிவுகளுக்கு உள்ளாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அதிக பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே மக்களது 650க்கு மேலான வீடுகளில் படையினர் தொடர்ந்து நிலைகொண்டுள்ளதாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வேளையில் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே 922க்கும் அதிகமான வீடுகளில் படையினர் நிலைகொண்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வேளை மூடப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட பல காவலரண்கள் இது வரை அகற்றப்படவில்லை எனவும் மறு புறத்தில் எழுதுமட்டுவாள், நுணாவில், மிருசுவில் உள்ளிட்ட பல பகுதிகளில் புதிதாகப் படைத் தளங்களை இராணுவம் அமைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (27,33)

- எரிபொருள் விநியோகத்தில் புதிய நடைமுறை -

# அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் வாகனங்களை பதிவு செய்யக்கோரல்

இதுவரை காலமும் வவுனியா அரச அதிபர்மூலம் அரச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுவந்த எரிபொருள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர் மூலமே அனுமதிப் பத்திரம் மூலம் எரிபொருள் பெறப்பட வேண்டுமென இராணுவத் தலைமை அதிகாரியினால் (வன்னி) அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே சகல அரச அரசசார்பற்ற நிறுவனங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட வாகனங்களினதும் ஜெனரேற்றர்களினதும் விபரங்களை 2003.07.14ஆம் திகதிக்கிடையில் அரச செயலகத்திற்கு உரிய படிவத்தில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பிந்திக் கிடைக்கும் விபரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் மேலதிக விபரங்களை அரச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறையில்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் போரூட் நிறுவனத்தின் நிதியுதவியில் வட்டக்கச்சி கிளி/கிழக்கு புனர்வாழ்வு நிறு வனத்தினால் நடைமுறைப்படுத் தப்படும் மாவடி கிராம அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.

மாவடிக் கிராமத்தில் 01 பொதுக் கிணறும் வருமான அதிகரிப்புத் திட்டமாக 55 பயனாளிகளில் முதற்கட்டமாக 08 பயனாளிகளுக்கு ஆடு, மாடு வளர்ப்பு, சிறு வியாபாரம் என்பனவற்றுக்கு உதவி வழங்கப்பட்டது. அத்தோடு மாயவனூர் கிராமத்தில் அரச நிதியுதவியுடன் 01 பொதுக் கிணறு அமைக்கப்படுகின்றது. தொடர்ந்து கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையில் கிளி/கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத்தின் 05 முன்பள்ளிகளுக்கு இலைக் கஞ்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. (12)

# இந்திய மீனவர்களின் அடாவடி குறித்து இந்திய அரசாங்கத்திற்கு கடிதம்

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசம் அனுப்பியது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகள் புரியும் அட்டகாசம் தொடர்பாக சுமுகமான தீர்வை பெற்றுத்தரக்கோரி இந்திய அரசுக்கு இலங்கைக்கான இந்திய தூதரகம் ஊடாக கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் நூற்றுக்கணக்கான இந்திய ரோலர்கள் வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து செய்த அட்டகாசத்தில் பல்லாயிரக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டதை அடுத்தே வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இந்திய மீனவர்களின் அடாவடித்தனம் பற்றி பிரதமர், சனாதிபதி, கடற்றொழில் அமைச்சு ஆகியவற்றுக்கு முறைப்பாடு செய்தும் எந்த வித பயனும் கிடைக்காத நிலையிலேயே இம்முறை நேரடியாக இந்தியத் தூதரகம் ஊடாக இந்திய அரசுக்கு இக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (33)

# 14ஆம் திகதி நேர்முகத்தேர்வு

(அலுவலக செய்தியாளர்)

புனர்வாழ்வு அகதிகள் மீள்குடிய மர்த்துகை அமைச்சின் அனுசரணையுடன் மாவட்ட செயலகத்தால் நடத்தப்பட்டுவரும் கணினிப் பயிற்சி நெறியின் இரண்டாவது தொகுதிக் கான பயிலுனர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 2003.07.14ஆம் திகதி காலை 10.00 மணிக்கு செயலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தோர் தேசிய அடை யாள அட்டை, கல்விச்சான்றிதழின் மூலப்பிரதி, ஏனைய தகைமைச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

# முல்லை நகரில் வீதி விபத்து சிறுவன் ஒருவன் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரப்பகுதியில் நேற்று இடம் பெற்ற வீதி விபத்தில் சிறுவன் ஒருவர் படுகாயமடைந்தார்.

காலை 8.30 மணியளவில் முல்லைத்தீவிலிருந்து செம்மலை நோக்கிச் சென்ற பேருந்து துவிச்சக்கர வண்டியுடன் மோதிப்பின் அருகிலிருந்த மதிலுடன் மோதியது. இதன் போது ஜெகன் எனப்படும் 13 வயதுச் சிறுவன் படுகாயங்களுக்கு உள்ளாகி முல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக் காக புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக முல்லை. காவல்பணிமனையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (20)

### எமது இயக்கம்...

இயக்கத்தின் வளர்ச்சிக்காக இவருக்குக் கொடுக்கப்பட்ட பணியைத் தன்னிடமுள்ள திறமையைக் கொண்டு மிகவும் சிறப்பாகச் செய்து முடிப்பார்.

1997 ஆம் ஆண்டு விசேட வேவுப் பிரிவில் நிர்வாக வேலைத் திட்டத்தை மிகவும் நேர்த்தியாகச் செய்தார். எந்த வேலையை நிர்மலனிடம் கொடுத்தாலும் அதற்கான பக்க உதவிகளும் இல்லாமலேயே அதனைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் ஒரு திறமையான போராளி. இன்றுவரை அவர் கடமையாற்றிக் கொண்டிருந்த விசேட படையணியின் வேலைத் திட்டங்களைத் தளபதிகளுக்குத் திருப்தி அளிக்கக் கூடிய வகையில் செய்து முடித்தவர் எனத் தெரிவித்தார்.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் உரையாற்றுகையில் அமைப்புக்குத் தேவையான மிகவும் பொறுப்புள்ள வேலைத் திட்டங்களை வெளிநாட்டிலிருந்து மேற்கொண்ட ஒரு போராளி. இவர் விமானப் படைத் தளபதி கேணல் சங்கர் அவர்களுடன் இணைந்தும் கூட சில வேலைத் திட்டங் களை முன்னெடுத்து வந்தவர். இவருக்குச் சுகயீனம் ஏற்பட்டுள்ளது என்பதை யாருக்கும் இவர் வெளிக் காட்டாது தமது போராட்டப் பயணத்தில் தனது நோயையும் தன்னுள் சுமந்து கொண்டு அதிக வேலையைச் செய்து வந்தார்.

இறுதியாகச் சிறப்புப் படையணியில் தனது வேலைகளைத் திறமையாகச் செய்து முடித்தவர். இந்த வேளையில் தனக்குக் கிடைக்கின்ற மிகுதி நேரத்தில் கேணல் சங்கருடைய போராட்ட வரலாற்றை நூலாக வெளியிட வேண்டும் என்ற பற்றின் காரணமாக அந்நூலை எழுதி வெளியிடும் தருணத்தில் இவர் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் என்றார்.

லெப்.கேணல் நிர்மலன் அவர்களின் வித்துடல் கிளிநொச்சி முரசுமோட்டையில் அமைந்துள்ள மாவீரரின் இல்லத்தில் இருந்து எடுத்து வரப்பட்டு கிளி/முருகானந்தா மகாவித்தியாலயத்தில் இறுதி வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. வீரவணக்க நிகழ்வில் பொது ஈகச் சுடரை சிறப்புப் படையணித் தளபதி கேணல் சொர்ணம் ஏற்றிவைத்தார். மாவீரரின் துணைவியார் புகழுடலுக்கான மலர்மாலையை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றது.

நினைவுரைகளை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், தென்முனைக் கட்டளைத் தளபதி ஜெயம், கிளி/மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், (கிளி/முருகானந்தா மகாவித்தியாலய ஆசிரியர் விக்கினராஜா ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து மாவீரரின் வித்துடல் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் விதைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (லோ)

### காணாமல் போகும்...

சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களில் ஒருவரான செல்வி ரீ.கிறிஸ்ரி கடந்தவாரம் முதல் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இப்பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, பாதுகாப்பு வலயங்களை அண்டியுள்ள பகுதிகளில் மீளக் குடியமரும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள பிரிவினர் தமது பணிகளை முன்னெடுக்க அனுமதிக் கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (27)

### அரசாங்கம்...

திபதிக்குக் கூறியுள்ளார்.

இருப்பினும் நோர்வே பிரதிநிதிகள் ஊடாக இவ்விடயத்தில் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறியுள்ளார்.

### நெடுந்தீவில்...

ண் நேற்று யாழ்.செயலகத்துக்கு அழைத்து வரப்பட்டு உரிய பதிவுகளின் பின்னர் அவர்களுடைய சொந்த இடத்துக்குச் செல்வதற்கு யாழ். செயலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (27)

### மகளிர்களின்...

பணிப்பாளர் பரணி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர், என்.பி.ஏ நிறுவன பிரதிநிதி, யு.என்.எச்.சி. ஆர் பிரதிநிதி, மக் பிரதிநிதி, எவ்.எஸ்.ரி. பிரதிநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பெற்றது.

இலங்கையிலேயே முதற்தடவையாக மகளிர் அணி கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றமை வன்னி மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கண்ணிவெடி அகற்றும்பணியில் இனி மகளிர் அணியும் செயற்படவுள்ளமையானது கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை விரிவுபடுத்தி வேகமான மக்களின் மீள்குடியேற்றத்திற்குப் பாதுகாப்பை உறுதிசெய்ய முடியும் என மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

### அஸ்தி...

முடியாது எனப் படையினர் தடைவிதித்துத் திருப்பி அனுப்பியுள்ளனர்.இப் பரப்பில் மீனவர்கள் மட்டுமே அடையாள அட்டைகளுடன் கடற்கரைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவித்த படையினர் மீறி எவரும் சென்றால் தகுந்த நடவடிக்கை எடுப்போம் எனவும் அச்சுறுத்தியுள்ளனர். (33)

### யுத்தகாலத்தை...

படைகளுடன் இணைந்து செயற்படும் தமிழ்க்குழுக்களின் அலுவலகங்கள் மீது யாராவது தாக்குதல் நடத்தினால் உடனடியாக அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யுமாறு மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லசந்தடி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்க்குழுக்களின் அலுவலகங்களுக்கு பாதுகாப்பாக நிறுத்தப்பட்டுள்ள பொலிசாருக்கே இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.


# அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபையால் கூட்டுறவுத் தின விழாவை ஒட்டி நடாத்தப்பட இருந்த பாடசாலை மாணவர்களுக்கும்/பணியாளருக்குமான மாவட்ட மட்டப் போட்டிகள் 12.07.2003 என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 16.07.2003 புதன் கிழமை காலை 9.00 மணிக்கு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும் என அதன் செயலாளர் அறியத்தருகின்றார்.

**தகவல்:**

**மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டக் கூட்டுறவுச் சபை.**

(சி-7760)



# 2ம் ஆண்டு நினைவில்...

| பிறப்பு | | வீரச்சாவு |
|---|---|---|
| 08 - 09 - 1976 |  | 11 - 07 - 2001 |

## கப்டன் முல்லைச் செழியன்

**(சுடர்மணி/சுதர்சன்)**

யோசெப் எட்வேட்-அலெக்ஸ் பிரதீபன்
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.

*எம் மண்ணின் விடிவிற்காய்*
*களம் பல கண்டு உயிர் துறந்த*
*உத்தமனே*
*ஆண்டொன்று போய் விட்டதய்யா*
*நீ வரும் வழியெல்லாம் விழி வைத்து*
*பார்க்கின்றோம் நாளையா...*
*வரமறுக்கிறாய்*
*ஏங்கித் தவிக்கும் எம் விழி*
*நீர் துடைக்க நீ வருவாய்*
*என்று எதிர்பார்த்திருக்கின்றோம்*
*காலம் கடக்கின்றது. எமது*
*ஏக்கம் தீர்க்க வரமாட்டாயா செழியா*

இன்றைய நாளில் இம் மண்ணின் விடியலுக்காய் மடிந்த சகல மாவீரரையும் நினைவு கூருகின்றோம்.

கள்ளப்பாடு
(3452)

உன் நினைவில்
குடும்பத்தினர்